விளைந்த மனிதர் விரித்தையாளர்

"மோட்டார் துரைசாமி நாயுடுவை உங்களுக்குத் தெரியுமா?

"தெரியவில்லையா! ஜோசியம் துரைசாமி நாயுடுவைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

"ஹூஹூம்! ரொம்ப சரி! இலக்கணம் துரைசாமி நாயுடுவைப் பற்றி உங்களிடம் யாராவது பேசியிருக்கிறார்களா?

"இல்லையா!... மேலே குறிப்பிட்ட மூவரில ஒருவரைப் பற்றிக் கூட உங்களுக்குத் தெரிந்திருக்கவில்லையா?... போகட்டும்! ஜி. டி. நாயுடு என்ற பெயர்....

"என்ன? 'அவரைத் தெரியாமல் இருக்குமா' என்கிறீர்களா? கரெக்ட்! அதே ஜி. டி. நாயுடுதான் முன்னால் குறிப்பிட்ட மூன்று துரைசாமி நாயுடுக்களும்!"

முந்நூறுக்கு மேற்பட்ட பஸ்களின் சொந்தக்காரராகி, தொழிலாளி கட்டத்திலிருந்து முதலாளி கட்டத்துக்கு இடம் மாறிவிட்ட பிறகும், நாற்பத்தி எட்டாவது வயதில் அமெரிக்காவிலுள்ள ஒரு மோட்டார் தொழிற் பயிற்சிப் பள்ளியில் மாணவராகச் சேர்ந்து பயிற்சி பெற்றுத் தேர்வும் பெற்றவர் அவர்!

திரு நாயுடு ஒரு காலத்தில் தமிழ் இலக்கண ஆராய்ச்சியிலும் தீவிரமாக ஈடுபட்டு இலக்கணத் துரைசாமி என்ற பெயருக்கு இலக்கானார். நல்ல வேளை! இயந்திர நுணுக்க ஆர்வம் அவரிடமிருந்து இலக்கணத்தைக் காப்பாற்றியது. ஜோசியக் கலையில் ஆர்வமாக இறங்கினர். நாயுடு ஏதாவது விபரீதமாக ஜோசியம் சொல்லிவிடப் போகிறாரோ என்று அவர் நண்பர்கள் அவரைப் பார்க்கவே பயந்த காலமும் இருந்தது!

ஒழுங்கு, கட்டுப்பாடு விஷயங்களில் திரு நாயுடு மிக மிகக் கண்டிப்பானவர். அவை மீறப்படுவதை அவரால் சகித்துக் கொள்ள முடியாது; தண்டனை கொடுக்கவும் தயங்க மாட்டார்.

ஆஸ்திரியா நாட்டிலுள்ள 'சால்ஸ் பர்க்' என்ற ஊருக்குப் போயிருந்தார். அப்போது அவர் கூட இயந்திர நுணுக்கப் பயிற்சிக்காக நான்கைந்து மாணவர்களும் பாரதத்திலிருந்து போயிருந்தார்கள். ஒரு குறிப்பிட்ட தினத்தன்று மாலை நான்கு மணிக்கு அவர்களை ரயில் நிலையத்தில், ஒரு தீர்மானிக்கப்பட்ட இடத்தில் வந்து சேரச் சொல்லிவிட்டுத் தம் அலுவல்களைப் பார்க்கப் போய் விட்டார். அன்று மாலை நாயுடுவும் அவர் நண்பர் ராமச்சந்திரனும், ரயில் நிலையத்துக்கு வந்து சேர்ந்த போது மாணவர்களைக் குறிப்பிட்ட இடத்தில் காணவில்லை. ஒரேமாதிரி நான்கைந்து வாயில்கள் அந்த நிலையத்தில் இருந்த காரணத்தால் அவர்கள் வேறு இடத்தில் நின்று கொண்டிருந்தார்கள்.

நாயுடு அவர்களின் விளக்கங்களை ஏற்

1. தொழிலதிபர் திரு ஜி. டி. நாயுடு அவர்களுக்கு அவரது எழுபத்தைந்தாவது பிறந்த தினத்தையொட்டி சென்னை நகரசபை வரவேற்பு அளித்துக் கௌரவித்தது. தமிழக முதன் மந்திரியுடன் திரு ஜி. டி. நாயுடு அளவளாவுகிறார். வலப்புறம் மேயர்.

2. தொழிலதிபர் ஜி. டி. நாயுடு அவர்களோடு திரு ராமச்சந்திரன்.

கொள்ளவில்லை. கட்டுப்பாட்டை மீறி விட்டதாகவே கருதினர். அவர்களிடமிருந்த அத்தனை மார்க்குகளையும் (அந்தத் தேச நாணயங்கள்) எண்ணி வாங்கிக் கொண்டார். அதன் பிறகு தொடர்ந்து மூன்று நாட்கள், ஒவ்வொரு மாணவனுக்கும் காலை, மதியம், மாலை என்று நேர இடைவெளி விட்டு ஒவ்வொரு மார்க்காக மூன்று மார்க்குகளைப் பிரதி தினம் கொடுத்தார். ஒரு துண்டு ரொட்டி காப்பிக்கே இரண்டு மார்க்குகள் தேவைப்படும். சாப்பாட்டுக்கு ஐந்து மார்க்குகள். ஆனால் அந்த மாணவர்கள் மூன்று மார்க்குகளைப் பெற்றுக் கொண்டு உபவாசமும் இருக்க வேண்டியதாயிற்று. கூட இருந்த நண்பர் ராமச்சந்திரன் ஒரு நாள் இரக்கம் தாங்காமல், நாயுடுவுக்குத் தெரியாமல் மாணவர்களுக்குச் சில நாணயங்கள் கொடுத்து விட்டார். இது எப்படியோ நாயுடுவுக்குத் தெரிந்தது. ராமச்சந்திரனின் மணிபர்சையும் வாங்கி வைத்துக் கொண்டுவிட்டார்!

இந்த நிலைமை தளர நான்கைந்து நாட்கள் ஆயின. அப்புறம்தான் ஒரு ரகசியம் தெரிய வந்தது. அத்தனை நாட்களிலும் நாயுடுவும் தினசரி மூன்று மார்க்குகள் விகிதத்திலேயே தம் சாப்பாட்டையும் நடத்திக் கொண்டிருந்தார் என்று! சோதனை பிறருக்கு மாத்திரம் அல்ல! ஆத்ம சோதனையும் உண்டு.

எந்த நாட்டில் உள்ள ஹோட்டலில் தங்க நேரிட்டாலும், அந்த ஹோட்டலின் சமையலறையை ஒரு நோட்டம் விடாமல் இருக்க மாட்டார். அந்தச் சமையலறை துப்புரவாக, சுத்தமாக இருந்தால் சாப்பாட்டை ஹோட்டலில் வைத்துக் கொள்வார். இல்லாத போனால் சுயம்பாகம் நடத்திக் கொள்ள அஞ்ச மாட்டார். உப்புமா கிண்டிச் சாப்பிடுவதில் ஆசை அதிகம். ஒரு சந்தர்ப்பத்தில் ஜெர்மானிய டாக்டர்கள் சிலரை வர வழைத்து உப்புமா விருந்து நடத்தி அவர்களுக்குச் சித்த வைத்திய முறைகளை விளக்கினார்.

எந்த நாட்டுத் தொழிற் கண்காட்சிக்கோ, தொழிற் சந்தைக்கோ நாயுடு போனால், ஒவ்வொரு நிறுவனமும் விநியோகிக்கும் விளம்பர–விளக்க வெளியீடுகளைக் கவனமாக வாங்கிச் சேர்த்துக் கொண்டு தம் ஹோட்டல் அறைக்குத் திரும்புவார். எல்லா வெளியீடுகளையும் அக்கறையுடன் படித்து முடிப்பார். பாரதத்தில் உபயோகிக்கக் கூடிய–தேவையான யந்திர சம்பந்தமான விளக்கங்களை மாத்திரம் பொறுக்கிக் கொண்டு, அவற்றைப் பற்றி எழும் சந்தேகங்களையும் அவை செயல்படும் முறைகளையும் மறு நாள் நேரடியாகப் போய்த் தீர்த்துக் கொண்டு வருவார். பிறகு பிரஸ்தாப இயந்திர சாதனங்களில் பயிற்சி பெறச் சில மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புவார். இந்த அடிப்படையில்தான் அவரால் பல மாணவர்களுக்குக் குறுகிய கால, ஆனால் வெகு சிறந்த யந்திர நுணுக்கப் பயிற்சி கிடைத்திருக்கிறது.

❊ ❊ ❊

நாயுடு ஒரு நேர்மைவாதி. ஆனால் தம் நேர்மையை யாரும் சந்தேகிக்கிறார்கள் என்றால் அவருக்குக் கோபம் வந்து விடும்.

ஒரு தடவை வெளிநாடுகளில் சுற்றுப் பயணம் செய்து விட்டுத் தனுஷ்கோடி வழியாகத் திரும்பும்போது இரண்டு 'லேத்துக்'களை வாங்கி வந்தார். ஒன்று நாலடி நீளம், மற்றொன்று ஓரடி நீளம்.

சுங்க அதிகாரிகள் பெரிய லேத்தின் விலை மதிப்பைக் கேட்டார்கள். நாயுடு தாம் விலை கொடுத்து வாங்கிய நாணயத்தின் சரியான மதிப்பான விலையை – ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் என்று சொன்னார். அதிகாரிகள் அசல் விலைப் பட்டியலைப் பார்க்க வேண்டும் என்று ஆரம்பித்தார்கள். அது எங்கேயோ மற்ற மூட்டை முடிச்சுகளில் சிக்கிக் கொண்டிருந்தது. சிரமப்பட்டு நாயுடு அதைத் தேடிக் கண்டுபிடித்துக் கொடுத்தார். அவர் சொன்ன விலைதான் அதில் கண்டிருந்தது. அதற்கு ஒரு குறிப்பிட்ட சுங்க வரியை நிர்ணயித்து விட்டு அதிகாரிகள் ஓரடி 'லேத்'துக்கு வந்தார்கள்.

சுங்க அதிகாரிகள் அந்தச் சிறிய 'லேத்'துக்கு நான்கில் ஒரு பங்கு சுங்க வரியை, பெரிய லேத்தின் அடிப்படையில் நிர்ணயித்து வசூலித்தார்கள். உண்மையில் அந்தச் சிறிய 'லேத்' நான்கு பங்கு அதிக விலையுள்ள நுணுக்கமான கருவி. முதல் அயிட்டத்தில் சுங்க அதிகாரிகள் நாயுடுவைச் சந்தேகிக்காமலிருந்திருந்தால், அவர் நிச்சயம் இரண்டாவது அயிட்டத்துக்கு வாங்கிய விலையைச் சொல்லியிருப்பார். ஆனால் அவர்கள் நடந்து கொண்ட விதம், அவர்களையே ஏமாறச் செய்தது. நாயுடு விலை நிர்ணய உரிமையை அவர்களுக்கே விட்டுவிட்டுப் பேசாமலிருந்தார். அவர்கள் இம்முறை விலைப் பட்டியலைப் புரட்டிப் பார்க்கவேயில்லை.

'நாயுடு அவர்கள் அடிக்கடி சர்க்காருடன் சண்டை போடுகிறாரே, நாட்டுப் பற்று இல்லாதவராக இருந்தால் இவரை நாம் பயன்படுத்திக் கொள்ளலாமே' என்று நினைத்து ஹைதராபாத் போலீஸ் நடவடிக்கை காலத்தில் இவரை உதவிக்கு அணுகிய தேசத் துரோக சக்தியை முளையிலேயே கிள்ளி, இது பற்றிய தகவலை உடனே மாநில முதன் மந்திரிக்குத் தெரிவித்துப் போதிய பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்தவர் நாயுடு அவர்கள்.

'மனித வாழ்க்கையில் முதல் இருபத்தைந்து ஆண்டுகள் வாழப் பயில வேண்டும்; கல்வி கற்க வேண்டும். இரண்டாவது இருபத்தைந்து ஆண்டுகளில் பொருள் சேர்க்க வேண்டும். மூன்றாவது இருபத்தைந்து ஆண்டுகளில் சேர்த்த பொருளை யெல்லாம் செலவழித்துத் தீர்த்து விட வேண்டும்' என்ற விசித்திரக் கொள்கை உடையவர் நாயுடு.

வாழ்க்கையில் எத்தனையோ பாடம் கற்று, எவ்வளவோ பணம் பார்த்து, எழுபத்தி ஐந்து வயதிலும் எந்த விதமான ஆடம்பரமான புகழுக்கும் ஆசைப்படாமல், மனத்தில் தோன்றியதை ஒளிவு மறைவு இல்லாமல் எடுத்துரைத்து, எந்தத் துறையிலும் ஆராய்ச்சி மனோபாவத்துடன் ஈடுபடும் திரு ஜி. டி. நாயுடு அவர்களை 'விந்தை மனிதர்' என்பதை விட நன்கு பண்பட்டு 'விளைந்த மனிதர்' என்றே சொல்லலாம்!

– மேனி